<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 99/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுல் அரவிந்த் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராமசுப்ரமணியம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 16.11.2022.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் உடுமலையில் வசித்து வருகிறேன். டாட்டா மோட்டர்சில் வேலை செய்து வருகிறேன். 9.11.2017 ம் தேதி நான் வெளியில் இருந்தபோது என் அம்மா போன் செய்து பாட்டியின் செயினை பறித்துச்சென்றுவிட்டாகள் என்று சொன்னார். உடனே நான் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள பன்னீர் வீட்டு முன்பு வந்து பார்த்தபோது என் பாட்டிக்கு கழுத்து மற்றும் கையில் சிராய்ப்பு காயம் இருந்தது. என்ன நடந்தது என்று என் பாட்டியிடம் கேட்டபோது இரண்டு நபர்கள் வந்து செயினை பறித்து சென்றதாக கூறினார் இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கொஞ்ச நாள் கழித்து சாமிநாதபுரம்** மற்றும் கணியூரில் வைத்து இரண்டு நபர்களை கைது செய்துள்ளதாக கூறி அடையாளம் காட்டுமாறு கூறினார்கள் நானும் பாட்டியும் சென்று சாமிநாதபுரம் மற்றும் கணியூரில் இருந்த நபர்களை அடையாளம்

காட்டினேன். எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய நகைகளை எங்களிடம் காட்டி அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்ததை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் அன்று பறித்து சென்றதாகும் **அது அசாபொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இன்று** நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் அன்று நானும் பாட்டியும் சென்று போலிசாரிடம் அடையாளம் காட்டிய எதிரிகளில் ஒருவர் ஆவர் ( மற்றொரு எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.) அந்த எதிரியும் ஆஜராகி இருந்தால் தனக்கு அடையாளம் தெரியும் என்று சாட்சி குறிப்பிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகார் நான் தான் எழுதினேன். புகார் கொடுக்கும்போது உடன் யார் யார் வந்தார்கள் என்றால் பாட்டி அம்மா நண்பர்கள் இரண்டு பேர் வந்தார்கள். பாட்டி உடன் வந்துள்ள நிலையில் நான் ஏன் புகார் கொடுத்தேன் என்றால் பாட்டிக்கு எழுதபடிக்க தெரியாது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. நான் போலிசார் விசாரணையிலும் புகாரிலும் என்னுடன் வந்தவர்கள் பற்றி கூறவில்லை என்றால் கூறவில்லை ஆனால் அனைவரும் இருந்தார்கள். புகாரில் எழுதியுள்ள பேனா மையும் போலிசார் எழுதியுள்ள விவரம் உள்ள பேனா மையும் ஒரே மாதிரி உள்ளது என்றால் நான் சொல்லச்சொல்ல அவர்கள் எழுதியிருக்கலாம் உண்மையிலேயே எனக்கு மறந்துவிட்டது. நான் கொடுத்த புகாரில் சம்பவ தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தேதி குறிப்பிடாத நிலையில் போலிசார் எந்த தேதி வேண்டுமானாலும் குறிப்பிட்டுக்கொள்ளலாம் என்றால் சரியல்ல.

2. நான் கொடுத்த புகாரில் பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய இரண்டு நபர்கள் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் நகையின் அடையாளம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் பாட்டியின் வயது 75 க்கு மேல் இருக்கும். எங்களுடைய வீடு எந்த திசையை பார்த்துள்ளது என்றால் வடக்கு வாசல் ஆகும். எங்கள் வீட்டில் தேவி என்ற பணிப்பெண் இருக்கும்போது 76 வயதான என் பாட்டி மாவு வாங்குவதற்கு சம்பவத்தன்று செல்ல வேண்டிய அவசியம் என்ன என்று சொன்னால் நிறைய பொருட்கள் இருந்ததால் எடுத்துச் செல்வதற்காக என் பாட்டி கூட சென்றார். எங்கள் வீட்டில் நான் தம்பி, அம்மா, பாட்டி மற்றும் தாத்தா ஆகியோர் அப்போது இருந்தோம். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரம் இரவு 6.30 மணி என்றால் சரிதான். அங்கு தெருவிளக்கு எதுவும் இல்லாமல் இருட்டாக இருக்கும் என்றால் தவறு ஒரு தெருவிளக்கு உள்ளது.

3. இந்த வழக்கு சம்பந்தமாக எத்தனை மணிக்கு எங்கு வைத்து

போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் புகார் கொடுத்தபோதும் மறுநாள் பகலில் விசாரணை செய்தார்கள். அ.சாபொ.1 என் பாட்டி உடையது என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான் இல்லை. அது என் பாட்டியின் நகை அல்ல என்று சொன்னால் பாட்டியின் தாலிச்செயின் ஆகும். என்னிடம் காட்டப்படும் அ.சாபொ.1 அறுபட்ட நிலையில் இல்லை அது புது செயின் என்று சொன்னால் சரியல்ல. தாலிச்செயினுக்கு இடையில் ஒரு கயிறு இருந்தது அதுதான் அறுபட்டிருந்தது.

4. பொதுவாக செயினில் தாலி கீழ் பாகத்தில் தான் தொங்கியவாறு இருக்கும் என்றால் எங்கள் குடும்ப வழக்கபடி தேர் தாலி என்பதால் அதிலேயே இரண்டு பக்கமும் முடிச்சி இருக்கும் அது கயிரோடு இணைக்கப்பட்டது. மேற்படி சான்று பொருள் தாலிச்செயினின் கொக்கி காணப்படும் பகுதி பின்புறம் கழுத்தில் இணைப்புக்காக உள்ளது நான் வழக்கிற்காக அதில் தான் தாலி கயிரோடு இணைக்கப்பட்டிருந்தது என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது புகார் மற்றும் போலிசார் விசாரணையில் கயிறுடன் கூடிய தாலிச்செயின் என்று குறிப்பிடவில்லை என்றால் போலிசார் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன். அ.சாபொ.1 கோதுமை மாடல் செயின் என்றால் அது பற்றி தெரியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அசாபொ.1 நகை எங்களுடையது அல்ல என்றால் அது எங்களுடையதுதான் அசாபொ.1 க்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5. போலிசார் சொல்லி தான் எதிரிகள் பாட்டியின் திருடினார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான் ஆனால் என் பாட்டி எதிரிகளை அடையாளம் காட்டினார். என் பாட்டி போலிசார் விசாரணையின்போது பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய நபர்கள் என்று கூறினாரா என்றால் அவ்வாறு தான் கூறினார். நான் சம்பவம் நடந்தபோது எங்கிருந்தேன் என்றால் 22 கிமீ தொலைவில் உள்ள பெரியபட்டியில் வேலையில் இருந்தேன். நான் சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றேனா அல்லது வீட்டிற்கு போனேனா என்றால் என் வீட்டிற்கு அருகில் சம்பவ இடம் உள்ளதால் அதன் வழியே வந்தபோது கூட்டமாக இருந்தது அங்கிருந்தவர்களிடம் விசாரித்துவிட்டு வீட்டில் இருந்த பாட்டியை விசாரித்தேன். காவல் நிலையத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் காரில் சென்றேன் அது யாருடையது என்றால் பக்கத்து வீட்டுக்காரர் உடையது. அது யாருடையது என்றால் தரணியின் அப்பா உடையது மாருதி 800 ஆகும். காரை யார் ஓட்டியது என்றால் நண்பர் ராம்குமார் ஓட்டினார்.

6. நான் மட்டுமே சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு வழக்கிற்காக பாட்டி, அம்மா, நண்பர்கள் உடன் சென்று புகார் கொடுத்ததாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய புகாரிலோ போலிசார் விசாரணையிலோ பாட்டியின் போலிசார் விசாரணையிலோ பாட்டிக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஏன் என்றால் கையில் பெரிய காயம் ஏற்பட்டதால் இந்த சின்ன காயத்தை சொல்லவில்லை. புகார் கொடுக்க என் பாட்டி வராமல் நான் மட்டும் போனபோது போலிசார் நான் கூறியதன் பேரில் மருத்துவ குறிப்பை எழுதி கொடுத்து அதை வீட்டில் இருந்த பாட்டியை அழைத்துக்கொண்டு சென்று மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் இருந்து தான் அழைத்து சென்றேன்.

7. என் பாட்டிக்கு எங்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டது என்றால் வலது கை தோள் மற்றும் கீழ் முழுங்கையில் காயம் ஏற்பட்டது. என் பாட்டி உடன் வராததாதல் தான் அவரிடம் புகார் பெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் சுமார் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் 50 நிமிடம் இருந்தோம். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த உடன் பாட்டியை கூட்டிக்கொண்டு மருத்துவ குறிப்புடன் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள் அங்கு போய்விட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். பாட்டியை வீட்டிற்கு கூட்டி சென்றுவிட்டேன். மறுநான் வேலைக்கு சென்றுவிட்டேனா என்றால் ஆமாம் என்னுடைய பணி நேரம் காலை 9.00– மாலை 6.00 மணி வரை. புகார் கொடுத்து எத்தனை நாட்கள் கழித்து நகை கிடைத்துவிட்டதாக போலிசார் சொன்னார்கள் என்றால் சரியாக தெரியவில்லை சுமார் 4 மாதம் இருக்கும்.

8. எனக்கு எதிரிகள் குறித்து யார் எப்போது தகவல் சொன்னார்கள் என்றால் சாமிநாதபுரம் காவல் நிலையத்தில் இருந்து எதிரிகள் சிக்கி இருப்பதாக கூறினார்கள் பின்பு கணியூர் காவல் நிலையத்தில் இருந்து எங்கள் வழக்கு சம்பந்தப்பட்ட எதிரி சிக்கி இருப்பதாக கூறினார். நானும் எனது பாட்டியும் எனது பைக்கில் சாமிநாதபுறம் காவல் நிலையம் சென்றோம். நான் வழக்கிற்காக மேற்கண்டவாறு எதிரியை பிடித்து வைத்தபோது பாட்டியுடன் சென்று அடையாளம் காட்டியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல புகார் கொடுத்தற்கு பின்னிட்டு எங்களுடைய புதியை செயினை கொடுத்து கிடைத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் பாட்டியிடம் நகையை பறித்ததாக சொல்லப்படும் நகைக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.